# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024

(Re -accredited with " A+ " Grade by NAAC)

**REVISED**

முனைவர் சு. சீனிவாசராகவன், **M.A., M.L.I.Sc, Ph.D.,**
தேர்வு நெறியாளர் (பொ)

அலுவலகம்: **0431-2407016**
தொலைப்பேசி : **0431-2407444**
மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
வலைத்தளம்:**www.bdu.ac.in.**

*************************************************************************

பார்வை : முதுநிலை/தேர்வுக்கட்டணம்/ செய்முறைத்தேர்வு/களப்பணி/நவம்பர்-2023 நாள் : **29.09.2023**

பெறுநர்
முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் (தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் நீங்கலாக)

அய்யா / அம்மையீர்,

பொருள் **:** நவம்பர்-2023 - முதுநிலை பட்ட, மற்றும் பட்டயப்படிப்பு - பருவத் தேர்வு - கட்டண விபரம் - செய்முறைத் தேர்வு - களப்பணி - தேர்வு நாட்கள் அறிவிப்பு - தொடர்பாக.

பார்வை **:** துணைவேந்தரின் ஆணை நாள்- 26.09.2023.

*******

நவம்பர்-2023ல் நடைபெறவிருக்கும், அனைத்து முதுநிலை பட்டப்படிப்புகள்,(M.A., M.Sc., M.Com., M.S.W., M.B.A., & M.C.A.), மற்றும் பட்டயப்படிப்பு (P.G. Diploma Courses)களுக்கான பருவத் தேர்வுக் கட்டணம், எழுத்துத்தேர்வுகள், செய்முறைத் தேர்வுகள், களப்பணிகளுக்கான கால அட்டவணை கீழ் கண்டுள்ளவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வரிசை எண் | விபரம் | நாள், மற்றும் கிழமை |
|---|---|---|
| 01 | பருவத்தேர்விற்கான விபரங்கள் அனைத்தும் கட்டணத்துடன் பெற்று பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | **13.10.2023** வெள்ளிக் கிழமை |
| 02 | தேர்வுக்கட்டணத்தை. தாமதக்கட்டணத்துடன் (ரூ.300+18% G.S.T.)உடன் பெற்று பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | **26.10.2023** வியாழக் கிழமை |
| 03 | 26.10.2023ம் தேதிக்குப்பிறகு கட்டணம் செலுத்துபவர்கள் (ரூ.300+500=800+18% G.S.T.) உடன் பெற்று பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | **30.10.2023** திங்கள் கிழமை |
| 04 | மாணாக்கர்கள் தொடர்பான, வருகைப்பதிவு சான்றிதழ் உட்பட அனைத்து விபரங்களும் உரிய படிவத்துடன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள், மற்றும் **இணையதளத்தில் பதிவேற்றம் நிறுத்தப்படும் நாள்** | **01.11.2023** புதன் கிழமை |
| 05 | **தேர்வு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியவர்கள் :** | |
| | 5.1.-2021-23ல் முதுநிலைப் பயின்று நிலுவைத்தாள் உள்ளவர்கள் | |
| | **5.2.**-மறுசேர்க்கை(Re-admission), மீள்சேர்க்கை (Re-do) பெற்றவர்கள். | |
| | **5.3.**தொலைக்கல்வி, தன்னாட்சி கல்லூரிகள், மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கை (Transfer-admission) பெற்றவர்கள் | |
| | வரிசை எண் **5.2.** மற்றும் **5.3.ல்** தொடர்புள்ளவர்கள், தேர்வு விண்ணப்பப் படிவத்துடன், பதிவாளரின் அனுமதிக்கடிதம், மற்றும் கூடுதல் தாள், மாற்றுத்தாள் குறித்த நகல்கள் இணைக்கப்படவேண்டும். மேலும் மறுசேர்க்கை(Re-admission), மீள்சேர்க்கை (Re-do) யில் தேர்வு எழுதும் மாணாக்கர்களுக்கான அகமதிப்பெண்களும் கட்டாயம் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். | |

**த.பி.பா.**

| வரிசை எண் | விபரம் | நாள், மற்றும் கிழமை |
|---|---|---|
| **செய்முறைத்தேர்வு, & களப்பணி (PRACTICAL EXAM. & FIELD WORK)** | | |
| 06 | முதுநிலை பட்ட, மற்றும் பட்டயப்படிபுகளுக்கான செய்முறைத்தேர்வுகள், மற்றும் களப்பணி நடைபெறும் நாட்கள். | **18.10.2023** புதன்கிழமையிலிருந்து **31.10.2023** செவ்வாய் கிழமை வரை |
| 07 | செய்முறைத்தேர்வு, களப்பணி குறித்த தேர்வு கால அட்டவனைகள் அனைத்தும் இவ்வலுவலகம் வந்து சேர கடைசி நாள் | **05.10.2023** வியாழக் கிழமை |
| 08 | முதுநிலை பட்டப்படிப்புகளுக்கான எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள் | **27.11.2023** திங்கள் கிழமை |
| 09 | முதுநிலை பட்டயப்படிப்பிற்கான தேர்வுகள் துவங்கும் நாள் | **08.12.2023** வெள்ளிக் கிழமை **(தோராயமாக)** |

மேலும், 2023-இல் சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் பற்றிய சுயவிவரங்களையும், (Bio-data) பாடக்குறியீட்டு (Subject code) விவரங்களையும், 2022ஆம் ஆண்டுகளில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களின் நடப்பு மற்றும் நிலுவைத்தாள்களின் பாடக்குறியீட்டு (Subject code) விவரங்களையும் இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பல்கலைக்கழக இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்யும் மாணாக்கர்களின் பெயர், பெயரின் தலைப்பெழுத்து (Initial) மற்றும் பிறந்த நாள் (Date of Birth) போன்ற விவரங்களை இளநிலை மதிப்பெண் பட்டியலின்படியே பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

மேலும், மாணாக்கர்களின் பெயர்கள் மற்றும் இதர தரவுகளில் நுழைவுச் சீட்டு (Hall Ticket), பருவத்தேர்விற்கான பதிவுப்பட்டியல் (Galley), தேர்வு முடிவுகள் (Result) ஆகியவற்றில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை உடனடியாக சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணாக்கர்களும் நடப்புப் பருவத் தேர்வுத்தாள்கள், மற்றும் அனைத்து நிலுவைத்தாள்களும் சேர்த்து கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும்.**

அவ்வாறு நடப்புப் பருவத் தேர்வுக்குப் பதிவு செய்யத் தவறினால், அம்மாணவர்கள் அடுத்த பருவத் தேர்விற்கு பதிவு செய்ய இயலாத நிலை ஏற்படும். விடுபட்ட பருவத்தை மீளப் பயிலுதல் (Re-do) என்ற வகையில் நான்கு பருவங்களும் முடித்த பிறகு, படிக்க நேரிடும் என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில், முந்தைய பருவத் தேர்விற்குப் பதிவு செய்ய இயலாத மாணவர்கள் குறித்து, அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணையதளத்தில் (Portal) பதிவுசெய்ய வேண்டுமெனில், பதிவாளரிடமோ / தேர்வு நெறியாளரிடமோ அனுமதியைப் பெற்ற பின்னரே பதிவுசெய்ய இயலும்.

மேலும், **இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் பாடக்குறியீட்டு விவரங்கள் மற்றும் கட்டண விவரங்களைப் பதிவிறக்கம் செய்து, அனைத்து முதுநிலை (M.A., M.Sc., M.Com.,M.S.W., M.B.A. & M.C.A.) பாடவாரியாக இணையத்தில் பதிவேற்றப்படும் கட்டண விவரங்களின் (Form–I) கூட்டுத்தொகையுடன், வங்கியில் செலுத்தப்படும் கட்டணத்தொகையை நேர்செய்து சுருக்கப்பட்டியலுடன் (Abstract) பல்கலைக்கழக இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீது நகலையும் இணைத்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.**

மேலும், கல்லூரியில் பயிலும் / தேர்வு எழுதும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு (Attendance) சதவீத விபரங்களை இணையதளத்தில் (Web-Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும். (Form - II, Form - III, Form - IV).

மேலும், வருகைப்பதிவு சதவீத குறைவுக் கட்டண (Condonation Fee) விவரங்களுடன் இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீதையும், தேவையானவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் நகலையும் இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் செய்து அந்நகல்களுடன் வருகைப்பதிவுக் குறைவுடைய மாணாக்கர்கள் யாரும் இல்லாவிடில் **'வருகைப்பதிவுக் குறைவு இல்லை'** என்று துறைவாரியாக பட்டியலைத் தயார் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மேலும், பல்கலைக்கழக இணையதளத்தில் Academic > Regulations பகுதியில் வெளியிடப்பட்டுள்ள மாணாக்கர்களுக்கான கல்விக்காலம் குறித்த தகவலில், **2019-2020ஆம் கல்வி ஆண்டுக்கு முன்னர் பயின்ற மாணாக்கர்கள் மீளச்சேர்க்கை / மறுசேர்க்கை (Re-do / Re-admission) என்ற வகையில் கல்லூரிகளில் சேர்ந்து 30-06-2024-க்குள்** தங்களின் படிப்பை முடித்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ள தகவலை கல்லூரி அறிவிப்புப்பலகையில் தனியே வெளியிடப்படவேண்டும்.

த.பி.பா.

மேலும், **மாற்றுத் திறனாளிகளுக்குத்** தேர்வு எழுதுவதற்கு விதிமுறைகளின் படி ஒரு உதவியாளர் (Scribe) நியமனம் செய்தல் வேண்டும்,

மேலும், மீளப் பயிலுதல் (Re-do), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer) பெறும் மாணவர்களின் அனுமதிக் கடிதத்துடன் தேர்வுக் கட்டணங்களையும், விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்,

1. மேலும், தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் அகமதிப்பெண்கள், செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் மற்றும் களப்பணித்தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவற்றை தேர்வு முடிந்த மறுதினமே அக, புறத் தேர்வாளர்களின் கையொப்பம், மற்றும் முதல்வரின் மேலொப்பத்துடனும் தேர்வு நெறியாளருக்கு அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கவும். மேலும், **01.11.2023**க்குள் இணையதளத்தின் வாயிலாக exams1.bdu.ac.in தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. மேலே கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, தேதி வாரியாக மட்டுமே செய்முறை, மற்றும் களப்பணி தேர்வுகள் நடத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்னர் நடத்த அனுமதி கிடையாது எனக் கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

3. பல்கலைக்கழக ஒருமை/இருமைப் (ODD/EVEN Semester) பருவச் செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் அந்தந்தப் பருவத்தேர்வில் மட்டும்தான் செய்முறைத் தேர்வுகளைச் (Practical Examinations) செய்ய இயலும், இதனை தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கும் தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. எழுத்துத் தேர்விற்கான அக மதிப்பெண்களை உரிய காலத்திற்குள் exams1.bdu.ac.in -ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

5. பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களின் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாகப் பராமரிக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. தேர்வு நெறியாளரின் ஆணையின்படி, நவம்பர்-2023 செய்முறைத் தேர்விற்கு நியமனம் செய்யப்பட்ட புறத் தேர்வாளர் தேர்வுப்பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள், மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் / தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத் தேர்வாளர்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்றம் செய்து மாணாக்கர்களுக்கு தேர்வு முடிவுகளை சரியாகவும் / விரைவாகவும் வழங்கிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒப்பம்-29.09.2023
தேர்வு நெறியாளர் (பொ)

*************************************************************************